

# நரி சொன்ன ‘யுரேகா’

**சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்**


தொகுப்பாசிரியர்கள்

இ.சு.முரளிதரன்

க.பரணீதரன்’

# நரி



# சொன்ன “யுரேகா”

சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்

தொகுப்பு
இ.சு.முரளிதரன்
க.பரணீதரன்

நரி சொன்ன “யுரேகா”

தொகுப்பு : இ.சு.முரளிதரன் & க.பரணீதரன்

முதற்பதிப்பு: 2022 பங்குனி

© தொகுப்பாசிரியர்களுக்கு

வடிவமைப்பு: க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய், இலங்கை

பக்கம்: 48

விலை: 200.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 34/3 செட்டித்தெரு, நல்லூர்

ISBN: 978-

ஜீவநதி வெளியீடு – 221

# தொகுப்புரை

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களால் படைக்கப்பட வேண்டுமெனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். அதுவே ஏற்புடையதும் கூட! ஈழத்தில் சிறுவர்கள் இலக்கியப் படைப்பாளிகளாக வெளிவருகின்ற சூழல் அருகியே காணப்படுவதாக நம்புகிறோம். அத்தகைய சூழலைக் கட்டமைத்துச் சிறார்களுக்கான களத்தினை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகின்றோம். அம் முயற்சியின் முகிழ் திறப்பாக "சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்" என்ற நூல் கடந்த வருடம் ஜீவநதி வெளியீடாக வந்தமை யாவரும் அறிந்ததே! அதன் நீட்சியாய் "நரி சொன்ன யுரேகா" என்னும் இத் தொகுப்பு வெளிவருகின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த இருபத்தைந்து மாணவர்களின் கதைகள் தொகுப்பாக வெளிவருகின்றன. இத்தகைய தொகுப்பு முயற்சியானது எதிர்காலத்திலே இன்னும் விரிவடையுமென உறுதி கூறுகின்றோம். அற்புதமான கதைகளை எழுதியுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம். இவர்களை இத்துறையிலே ஊக்குவிக்கின்ற ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த பாராட்டுகளை சமர்ப்பிக்கின்றோம். தொடர்ந்து எழுதுங்கள் என்ற வேண்டுதலோடு...

தொகுப்பாசிரியர்கள்

இ.சு.முரளிதரன்

க.பரணீதரன்

## உள்ளே....

1. நிறம் மாறிய எலி
2. முதலில் உணவு
3. நேர்மை
4. நிலா
5. மூங்கிலைப் போல் வாழ்
6. நம்பிக்கை
7. பூமியின் எதிர்காலம்
8. பெண் சிங்கம்
9. கடவுளும் டைனோசரும்
10. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
11. தர்மம்
12. பொறுமை
13. நன்மையே செய்க
14. நரி சொன்ன “யுரேகா”
15. அனுபவமே வாழ்க்கை
16. பாதுகாப்பு
17. நட்பின் பரிசு
18. தீக்குச்சிகளின் உரையாடல்
19. சேரும் இடம்
20. வண்ணத்துப்பூச்சியும் வெட்டுக்கிளியும்
21. பொன் வண்டு
22. விளக்குமாற்றின் விளக்கம்
23. உண்மையே வெல்லும்
24. அரை உயிர்கள்
25.இரண்டு மைனாக்கள்

# நிறம் மாறிய எலி

எலி ஒன்று பச்சோந்தி ஒன்றைக் கண்டது. தான் இருக்கும் இடத்தின் நிறத்திற்கு அப்பச்சோந்தி மாற்றமடைவதை அவதானித்தது. தானும் பச்சோந்தி போல மாற்றமடைய ஒரு வழியை யோசித்தது. பச்சைப் பசேல் என உள்ள புல்வெளியைக் கண்டது. எலி அதிலே உருண்டு புரண்டது. நீண்ட நேரத்திற்கு பின்னர் கொஞ்சம் பச்சையானது. பச்சோந்தியின் அருகே சென்று “என்னைப்பார். நானும் உன்னைப் போல நிறம் மாறிவிட்டேன்” என்றது. “இது உனக்கு ஆபத்து. உன் இருப்பிடத்திற்கு சென்றுவிடு” என்று பச்சோந்தி அறிவுரை கூறியது. எலியோ அதைக் கேட்கவில்லை. வயலில் நெற்குவியல் காணப்பட்டது. அதைக் கண்ட எலி நெல்லை எடுத்து வந்து வைக்கோலின் மேல் வைத்து உண்டது. சாரைப்பாம்பு ஒன்று எலியை நோக்கி வந்தது. சாரைப் பாம்பு வைக்கோலின் நிறத்தில் இருந்ததால் எலி அதைக் காணவில்லை. ஏதோ ஒரு சத்தம் கேட்டுப் பயந்தது. வைக்கோல் அசைவது போலிருந்தது. எலி வேகமாக ஓடிச்சென்று இருப்பிடத்தை அடைந்தது. அப்போது தான் அதற்கு பச்சோந்தி கூறிய அறிவுரை ஞாபகம் வந்தது.

ஜெ.லிவியானா

தரம் – 05

யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

# முதலில் உணவு

ஒரு ஊரில் கவிதா எனும் பெண் வசித்து வந்தார். அவருக்கு கவின், ராஜா எனும் இரு பிள்ளைகள் இருந்தனர். ஒரு நாள் அவர்கள் விளையாடி விட்டு மிகவும் பசியுடன் வீட்டுக்கு வந்தனர். கவிதா அப்போது தான் தோசை சுட ஆரம்பித்தார். கவின் "அம்மா எனக்கு தான் முதல் தோசை" எனக் கூறினான். "இல்லை நான் தான் மிகவும் பசியுடன் உள்ளேன் எனக்குத் தான் முதல் தோசை" என ராஜா கூறினான். இருவரும் சண்டை பிடித்தனர். கவிதா தோசையைச் சுட்டு விட்டு யாருக்கு முதலில் கொடுப்பது என யோசித்து கொாண்டிருந்தார். அப்போது முதியவர் ஒருவர் வீட்டிற்கு முன் நின்று "அம்மா பசிக்கிறது" என மிகவும் சோர்ந்த குரலில் கூறினார். அப்போது கவிதாவின் கையில் இருந்த தோசையை, கவினும் ராஜாவும் கொண்டு போய் அந்த முதியவரிடம் கொடுத்து விட்டு வந்தனர். கவிதா "நீங்கள் இருவரும் தானே யாருக்கு முதல் தோசை எனச் சண்டை பிடித்தீர்கள். இப்பொழுது நீங்கள் இருவரும் அந்தத் தோசையை கொண்டு போய் அந்த முதியவரிடம் கொடுத்து விட்டு வருகிறீர்களே" எனக் கேட்டார். அதற்கு அவர்கள் இருவரும்

"இந்த உலகில் எவர் ஒருவர் மிகவும் பசியுடன் இருக்கிறாரோ, அவருக்கே முதலில் உணவு சொந்தமாகும்."

எனக் கூறினார்கள். அதைக் கேட்ட கவிதா தனது பிள்ளைகளை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவர்கள் இருவரையும் அணைத்து கொண்டார்.

ஜெ.யஸ்மிகா

தரம் – 08

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# நேர்மை

விமல், கணேஷ், தீபன் என்னும் மூவரும் வேலை தேடி அலைந்தனர். பத்திரிகைச் செய்தி ஒன்றைப் படித்துவிட்டு நகரிலுள்ள தொழிலகம் ஒன்றுக்கு நேர்முகப் பரீட்சைக்கு சென்றனர். மூவரும் நேர்முகப் பரீட்சையில் தோல்வி கண்டனர். அங்குள்ள அதிகாரி "பின்பக்க வாசலால் வெளியே செல்லுங்கள்" என்று கூறியனுப்பினார்.



பின்பக்கத்திலே அழகான பூந்தோட்டம் ஒன்று இருந்தது. மணம் வீசும் மல்லிகைப் பூக்களும், மனதைக் கவரும் ரோஜாப்பூக்களும் அதிகமாகக் காணப்பட்டன. தோட்டத்துக்கு முன்னால் ஒரு பலகையில் "இப்பூக்கள் பெறுமதியானவை. அனுமதியின்றிப் பறிக்காதீர்கள்" என எழுதியிருந்தது. விமலும் தீபனும் பூக்களைப் பறித்தனர். "இது தவறான செயல்" என்று கணேஷ் தடுத்தான். எனினும் அவர்கள் கேட்கவில்லை. சற்றுத் தூரத்தில் நீர்க்குழாயிலிருந்து நீர் வீணாகக் கொட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த கணேஷ் ஓடிச்சென்று நீர்க்குழாயை இறுகப் பூட்டினான். மூவரும் பின் வாசலை அடைந்தனர். "இந்தக் கதவால் செல்ல முடியாது. முன் வாசலைப் பயன்படுத்தவும்" என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த விமலும் தீபனும் "வேலையும் தரவில்லை. எம்மை வைத்து விளையாடுகிறார்கள்" என்று ஏசியவாறே சென்றனர்.

முன் வாசலிலே தொழிலகத்தின் அதிகாரி நின்றார். "கணேஷ் நீங்கள் நேர்முகத் தேர்விலே சித்தி பெற்று விட்டீர்கள். அந்தப் பூந்தோட்டத்திலே மறை காணொளி ஒன்று பொருத்தப் பட்டுள்ளது. உங்கள் நேர்மையை கண்டு கொண்டேன். வாழ்த்துகள்" என்றார். விமலும் தீபனும் தங்கள் தவறை உணர்ந்தனர். கணேஷ் போலவே தாமும் இனி நேர்மையோடு இருப்போமென மனதிற்குள் உறுதி கொண்டனர். ஆகவே சிறுவர்களாகிய நாமும் நேர்மையோடு வாழ்ந்தால் நன்மைகள் வந்து சேரும்.

பி.தாரணி

தரம் - 09

யா/ கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி

# நிலா

நிலா மிகவும் கெட்டிக்காரி. சுட்டித்தனம் மிக்கவள். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அப்பாவின் செல்லம்! அவளுக்குத் திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டது. தந்தையார் வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று வைத்தியரிடம் காட்டினார். நிலாவைப் பரிசோதித்த வைத்தியர் மருந்து எழுதிக் கொடுத்துவிட்டு, தாதியை அழைத்து ஊசி போடுமாறு கூறினார்.



நிலாவிற்கு ஊசி என்றால் பயம். அவள் அழத் தொடங்கினாள். “ஊசி பெரிதாக வலிக்காது. எறும்பு கடிக்கிறது போலத்தான் இருக்கும். நீங்கள் ஊசிபோடுங்கோ. அப்பா கண்டோஸ் வாங்கித் தருகிறேன்” என்று கூறிவிட்டு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார். கண்டோஸ் ஒன்றை வாங்கி வந்து கொடுத்தார். “பிள்ளைக்கு என்ன பெயர்?” என்று கேட்டுக் கொண்டே தாதி ஊசி போட்டு முடித்தார். நிலாவிற்கு மெதுவாக வலித்தது. ஆனாலும் அவள் அழவில்லை. “அச்சாப்பிள்ளை. இதிலை இருங்கோ அப்பா மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன்” என்று தந்தை கூறிவிட்டு சென்றார்.

நிலாவிற்கு அருகிலே அமர்ந்திருந்த சிறுமி அழுது கொண்டிருந்தாள். “ஊசி பெரிதாக வலிக்காது. எறும்பு கடிக்கிறது போலத்தான் இருக்கும். நீங்கள் ஊசி போடுங்கோ... அக்கா உங்களுக்கு இந்தக் கண்டோஸ் தருகிறேன்” என்று அச்சிறுமிக்கு நிலா ஆறுதல் கூறினாள். கண்டோஸை சிறுமியிடம் கொடுத்தாள். இவற்றைக் கண்ணுற்ற நிலாவின் தந்தை அளவிலாத சந்தோஷம் அடைந்தார்.

ர.கஜதாரணி

தரம் - 10,

யா/ கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி

# "மூங்கிலைப் போல் வாழ்வாய்"

குரு ஒருவர் மரணப் படுக்கையிலே இருந்தார். அவரிடம் சீடன் ஒருவர் "நான் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைச் சொல்லுங்கள் ஐயா" என்றார். "மூங்கிலைப் போல் வாழ்வாய்" என்று குரு கூறினார். சீடனுக்கோ அந்த அறிவுரை விளங்கவில்லை. திகைத்து நின்றார். குரு அவரை அருகே அழைத்தார். "மூங்கில் ஒரு புல் இனம். ஆனால் வானைத் தொடும் அளவு வளர்கிறது. அதைப் போல உன் எண்ணங்களும் உயரட்டும். அதிகளவாகச் சந்ததியை உருவாக்குகிறது. நீயும் அவ்வாறு மாணவர் சந்ததியை உருவாக்கு! மூங்கில் மரணமடைந்தாலும் புல்லாங்குழலாக வாழ்கிறது. அவ்வாறே நீயும் மரணத்திற்கு பிறகும் பயன் தரத்தக்க நூல்களை இவ்வுலகிற்கு விட்டுச்செல்" என்றார். அந்த விளக்கத்தைக் கேட்ட சீடர் மகிழ்ச்சியடைந்தார்.

பி.ஜனனி

தரம் - 06

யா/ கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி

# நம்பிக்கை

பாலையூரில் மாதவன் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அவ்வூரிலுள்ள சோதிடரிடம் சென்ற போது "நீங்கள் 40 வருடங்கள் தான் உயிர் வாழ்வீர்கள்" என்று சோதிடர் கூறினார். மாதவனுக்கு பயம் ஏற்பட்டது. நாற்பது வயதை நெருங்க நெருங்க நோய்களும் அதிகரித்தன. அவர் மிகவும் மெலிந்து போனார்.

ஒரு நாள் பாலையூருக்கு இளவயதுடைய சாமியார் ஒருவர் வந்தார். மாதவன் அவரிடம் சென்று தனது கவலையைத் தெரிவித்தார். "இத்தகைய சோதிடம் கோடியில் ஒருவருக்கே உரியது. இதற்கு ஒரே ஒரு தோஷ நிவர்த்தி தான் உள்ளது. ஒவ்வொரு நாளும் ஐந்து மரக்கன்றுகளை நட வேண்டும். அப்படிச் செய்தால் உங்கள் ஆயுள் கூடும்" என்றார். இளவயதுச் சாமியார் கூறியதை மாதவன் நம்பினார். ஒவ்வொரு நாளும்



மரக்கன்றுகளை நட்டார். நாற்பது வயதைக் கடந்தார். மரணபயமே அவரிடம் ஏற்படவில்லை.

நீண்டகாலத்திற்குப் பின்பு மீண்டும் அந்த சாமியார் ஊருக்கு வந்தார். பாலையூர் சோலையூராகக் காட்சி கொடுத்தது. மாதவன் சாமியாரைச் சந்தித்து வணங்கினார். “எனக்குக் கடவுளில் மீது தான் நம்பிக்கை உள்ளது. சோதிடத்தில் நம்பிக்கை இல்லை. ஆனாலும் உனக்கு நம்பிக்கையூட்டவே மரங்களை நடுமாறு கூறினேன். இப்போது நீயும் சிறப்பாக இருக்கிறாய். இந்த ஊரும் பசுமையாக உள்ளது” என்று சாமியார் சொன்னார். மாதவன் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்தார்.


தே.பவீந்திரன்

தரம் - 09

யா/ கரவெட்டி விக்னேஸ்வரக்கல்லூரி

# பூமியின் எதிர்காலம்

பிரபஞ்சத்திலுள்ள வேற்றுக்கிரகம் ஒன்றின் பாட சாலையில் அதிபர் கூட்டம் நடந்தது. “மாணவர்களே! இதுவரை யிலும் நீங்கள் எத்தனையோ ஆய்வுகளைச் செய்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள்! நமது தேசத்தின் தலைவர் எங்கள் பாடசாலைக்கு முக்கிய பொறுப்பினை வழங்கியுள்ளார்” என அதிபர் கூறினார். என்ன பொறுப்பு என்பதை அறிய வேற்றுக் கிரக மாணவர்கள்



ஆவலோடு காத்திருந்தனர். "எமது கிரகம் நீண்டகாலத்தின் பின்னர் அழியவுள்ளதால் பூமியில் சென்று வாழ வேண்டியுள்ளது. எனவே பூமியைப்பற்றி ஆய்வு செய்து வர வேண்டும். எங்கள் மாணவர் தலைவர் "லுதிடுகா" அவர்களை அனுப்ப முடிவுசெய்துள்ளோம்" என்று அதிபர் கூறினார். மாணவர்கள் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பூமிக்கு வந்த "லுதிடுகா" எவருக்கும் தெரியாமல் பூமியை ஆய்வு செய்து திரும்பினார். தனது பாடசாலையில் ஆய்வை ஒப்படைத்தார். ஆய்வின் முடிவினைச் சுருக்கமாக வெளிப்படுத்தினார். "பூமியில் வாழ்கின்ற மனிதர்கள் பூமிப்பற்று இல்லாதவர்கள். இயற்கை வளங்களை அழிக்கிறார்கள். பூமியைப் பத்துத்தடவை முற்று முழுதாக அழிக்கு வகையான அணுகுண்டுகளை உருவாக்கி வைத்துள்ளார்கள். இரசாயனப் பொருள்களால் ஐம்பூதத்தையும் சேதப்படுத்துகிறார்கள். எங்கள் கிரகத்திற்கு முன்பே பூமி அழிந்துவிடும். அவர்கள் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே நீண்ட காலம் அங்கு மனிதர்கள் வாழ முடியும். எனவே நாங்கள் வேறு ஒரு கிரகத்தினைத்தான் நாட வேண்டும்" என்று லுதிடுகா கூறி முடித்தார். லுதிடுகா பூமிக்கு வந்ததையோ, அவரது ஆய்வின் முடிவினையோ அறியாத பூமியிலுள்ள வல்லரசுகள் புதிய அணுகுண்டு உற்பத்திக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தன. "பாவம் பூமி" என ஒவ்வொரு கிரகமும் நினைத்துக் கவலை கொண்டது.

த.தேனுகன்
தரம் - 08
யா/உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி

# பெண் சிங்கம்

பூம்பனி தேசத்தை ஆண்ட மதிநிலவன் எனும் அரசர் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். அப்பொழுது அரண்மனையின் பயிற்சித் திடலில் இளவரசன் மணிமாறனும் இளவரசி சிம்மதேவியும் வாட்பயிற்சி செய்து கொண்டிருந்தனர். அங்கு வந்த அரசர் இளவரசியின் கையிலிருந்த வாளை வாங்கிய வண்ணம் "அரசியார் உங்களை அழைக்கிறார் மகளே... அந்தரப் புரத்திற்குச் செல்லுங்கள்" என்றார். சிம்மதேவி சென்றவுடன், அமைச்சரின் மகனை அழைத்து அவனிடம் வாளைக் கொடுத்து "இளவரசனோடு இணைந்து பயிற்சி செய்" எனச் சொல்லி விட்டு வேட்டைக்குச் சென்றார்.

காட்டிலே பெரிய குன்றின் மீது ஏறி நின்ற மதிநிலவன் அனைத்தையும் நன்றாகப் பார்த்தார். ஒரு பெண் சிங்கம் மானை வேட்டையாடிக் குகைக்கு இழுத்துச் சென்றது. வாசலிலே காத்திருந்த ஆண் சிங்கமும் குட்டிகளும் உணவை உண்டன. அதைப் பார்த்த மதிநிலவனுக்கு ஆழ்ந்த யோசனை ஏற்பட்டது. அரண்மனை திரும்பிய அரசன் இளவரசியான சிம்மதேவியை அழைத்தார். தன்னிடம் இருந்த உடைவாளை எடுத்து அவளது கையிலே கொடுத்துவிட்டு "இளவரசனோடு இணைந்து பயிற்சிசெய். நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உன்னிடம் உள்ளது. நானில்லாத காலத்திலே நீதான் ஆட்சி செய்ய வேண்டும்" என்றார்.


மு.மேதினிகா

தரம் - 10

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# கடவுளும் டைனோசரும்

கடவுள் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு கோளுக்குச் சென்று வாழ்ந்தார். ஜூராசிக் யுகத்திலே பூமிக்கு வந்தார். பூமியிலே அழகான வீடு ஒன்றைக் கட்டி வாழ்ந்தார். அந்த வீடு மிகவும் பளபளப்பாக இருந்தது. எல்லா உயிரினங்களும் கடவுளின் வீட்டைக்காணச் சென்றன. கடவுள் தன்னைக் காண வந்த உயிரினங்களை ஆசீர்வதித்தார்.



வரம் கொடுத்தார். டைனோசர் கடவுளைக்காண வந்தது. ஆணவத்தோடு சத்தமிட்டது. கடவுளின் வீட்டை முட்டி மோதியது. கடவுள் கோபம் கொண்டார். விண்கற்கள் மழை போல விழுந்தன. டைனோசர் இனமே அடியோடு அழிந்தது. கடவுள் பூமியை விட்டுப் போனார். கடவுளின் வருகைக்காக டைனோசர் இல்லாத பூமி காத்திருக்கின்றது.

க.கைலாஷ்
தரம் – 07
யாழ் இந்துக்கல்லூரி

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

ஓர் ஊரில் செங்கீரன் எனும் பெயரில் ஒரு திருடன் இருந்தான். அவன் புதிய புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்துத் திருடி வந்தான். அவனை எவராலும் பிடிக்க முடியவில்லை. அதனால் திருடித் திருடிப் பெரும் பணக்காரன் ஆனான். பின்னர் திருடுவதைக் கைவிட்டான். மக்களுக்குச் சிறிதளவு உதவினான். புகழைப் பெற்றான். அவனைப் பெரிய மனிதராக மதிக்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள் செங்கீரன் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கினான். கோவிலை வலம் வந்தான். அப்போது அம்மனின் வைரமூக்குத்தி கீழே விழுந்திருப்பதைக் கண்டான். அதைக் கோவில் உரிமையாளரிடம் கொடுத்துப் புகழ் பெற நினைத்தான். சட்டைப் பையிலே வைத்துக் கொண்டு கோவிலை வலம் வந்தான். அப்போது திடீரெனக் காவல்துறையினர் கோவிலுக்குள் வந்தனர். அனைவரையும் பரிசோதித்தனர். செங்கீரனின் சட்டைப்பையிலிருந்து வைரமூக்குத்தியை எடுத்தனர். செங்கீரனைக் கைது செய்தனர். செங்கீரன் கோவிலில் விழுந்துகிடந்தே மூக்குத்தியை எடுத்ததாகக் கூறினான். யாருமே நம்பவில்லை. முற்பகல் செய்யும் தவறு பிற்பகலிலே விளையும் அல்லவா?

பி.பிரஹாஷினி

தரம் 07

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# தர்மம்

ஒரு ஊரில் அம்மன் கோவில் ஒன்று இருந்தது. அங்கே பிச்சைக்காரர்கள் பலர் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு கோடீஸ்வரர் கோவிலுக்கு வந்தார். பிச்சைக்காரர்களுக்கு அதிகளவு பணத்தைப் பிச்சையாகப் போட்டார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் கொடுக்கத் தொடங்கினார். ஒரு நாள் பிச்சைக்காரர்கள் இருவர் கோடீஸ்வரரிடம் “ஏனய்யா எங்கள் எல்லோருக்கும் இவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள். நீங்கள் அவற்றை வைத்திருக்கலாம் தானே” என்று கேட்டனர். கோடீஸ்வரர் ஒன்றும் பேசாமல் சிரித்துவிட்டுச் சென்றார்.



மறுநாள் காலை விடிந்ததும் கோடீஸ்வரர் அந்த அம்மன் கோவிலுக்கு வந்தார். தன்னிடம் கேள்வி கேட்ட பிச்சைகாரர்கள் இருவரிடமும் ஆளுக்கு ஒரு பையினைக் கொடுத்தார். உள்ளே நிறையப் பணம் இருந்தது. "இந்தப் பைகளை பாதுகாப்பாக வைத்திருங்கள். நான் ஒரு மாதத்தின் பின்னர் வந்து பெற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். காலம் ஓடியது. ஒருமாதத்திற்குப் பின் கோடீஸ்வரர் மீண்டும் கோவிலுக்கு வந்தார். பிச்சைக்காரர்கள் இருவரும் கோடீஸ் வரரை நோக்கி ஓடிச் சென்றனர். "ஐயா, நாங்கள் இந்தப் பணத்தைப் பாதுகாப்பதற்காக மிகவும் பாடுபட்டோம். நிம்மதியையும் உறக்கத்தையும் இழந்து விட்டோம். தயவு செய்து பணப்பைகளை இப்பொழுதே பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். "சிறிதளவு பணத்தை ஒரு மாதம் பாது காக்கவே உங்கள் நிம்மதியை இழந்து விட்டீர்கள். நான் கோடிக் கணக்கான பணத்தைப் பாதுகாக்க எவ்வளவு பாடுபடுவேன் என்பது புரிந்திருக்கும். இல்லாதவர்களுக்கு கொடுப்பது இறைவனுக்கு கொடுப்பது அல்லவா? அந்தப் பணம் தர்மமாக என்னிடமே நிரந்தரமாக இருக்கும். எனவே தான் தானம் செய்கிறேன்" என்று கோடீஸ்வரர் கூறினார்.

வி.நிவிந்தன்
யா/புற்றளை மகா வித்தியாலயம்
தரம் - 09


# பொறுமை

ஒரு ஊரில் தாத்தாவும் பேர்த்தியும் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் தாத்தா தனது பேர்த்தியிடம் தேவாரம் ஒன்றைக் கொடுத்து மனப்பாடம் செய்யச் சொன்னார். பேர்த்தி அவசர அவசரமாக மனப்பாடம் செய்தாள். அவளுக்கு மனனமாக வில்லை. அவளது தாத்தா தோட்டத்திலே குழி தோண்டிக் கொண்டிருந்தார். "எனக்குத் தேவாரம் பாடம் வரவில்லை" என்று பேர்த்தி கூறினாள். குழி தோண்டி முடித்த தாத்தா தோட்டத்தை விட்டு வீட்டுக்கு வந்தார். வரும் வழியிலே விழுந்துவிட்டார். ஆனாலும் சிரித்துக் கொண்டே எழுந்தார். "பார்த்தாயா... நான் பூமியைத் தோண்டினேன். ஆனாலும் விழுந்தபோது பொறுமைமிக்க பூமி என்னைத் தாங்கிப் பிடித்தது. அதனால் தான் பூமியைப் பொறுமையின் சின்னம் என்கிறோம். நீயும் பொறுமையோடு தேவாரத்தை மனப்பாடம் செய். மனனமாகி விடும்" என்று தாத்தா கூறினார். பேர்த்தியும் பொறுமையோடு மனப்பாடம் செய்யத் தொடங்கினாள்.

த.அக்ஷிகா
தரம் - 07
யா/இந்து மகளிர் கல்லூரி

# நன்மையே செய்க

ஆலமரமொன்றில் தேன் கூடு ஒன்று இருந்தது. அத்தேன் கூட்டில் ராணித்தேனீயும் ஆயிரக்கணக்கான வேலையாட் தேனீக்களும் இருந்தன. ராணித் தேனீயின் கட்டளைக்கேற்ப வேலையாட் தேனீக்கள் தேனைச் சேகரித்தன. வழமைபோல ஒருநாள் தேனீக்கள் தேன் சேகரிக்கச் சென்ற போது பூக்களை யும் இலைகளையும் வெட்டுக்கிளிகள் வெட்டி அழித்திருந்தன. இதனால் வருந்தமடைந்த தேனீக்கள் வெட்டுக்கிளிகளிடம் சென்று “பூக்களையும் இலைகளையும் வெட்டி அழிக்க வேண்டாம்” என்று பணிவாகக் கேட்டன. “நீங்கள் சொல்லி



நாங்கள் கேட்க வேண்டுமா?” என்று வெட்டுக்கிளிகள் ஆணவத்தோடு பேசின. தேனீக்களின் முன்னாலேயே மீண்டும் இலைகளையும் பூக்களையும் வெட்டின. இதனால் கோப மடைந்த தேனீக்கள் “தமது கொடுக்குகளால் கொட்டி வெட்டுக் கிளிகளை விரட்டிவிடலாம்” என்று எழுந்தன. ஆனால் ராணித்தேனீ “பிறர்தீங்கு செய்தால் பதிலுக்கு நாங்களும் தீங்கு செய்யக்கூடாது” என்று அறிவுரை கூறியது.

தேனீக்கள் தேன் சேகரிக்க வழியில்லாமல் காலத்தைக் கடத்தின. ஒருநாள் காகக்கூட்டம் ஒன்று வெட்டுக்கிளிகளை வளைத்துக் கொண்டது. வெட்டுக்கிளிகளோ “நாம் காகங்களுக்கு இரையாகப் போகிறோம்” என்று நடுங்கின. இதை அறிந்த தேனீக்கள் சந்தோசம் அடைந்தன. ஆனால் ராணித் தேனீயோ “வெட்டுக்கிளிகள் எங்களுக்குக்குத் தீங்கு செய்தாலும், அவர்களுக்கு ஆபத்து என்றால் நாம் நன்மையே செய்ய வேண்டும்” என்று கூறியது. தேனீக்கள் கூரிய கொடுக்குகளால் கொட்டிக் காகங்களை விரட்டின. வெட்டுக் கிளிகள் தேனீக்களின் செயல் கண்டு வெட்கம் அடைந்தன. அன்றிலிருந்து தேனீக்களும் வெட்டுக்கிளிகளும் நண்பர் களாயின. பிறர் நமக்குத் தீங்கு செய்தாலும் நாம் நன்மையே செய்ய வேண்டும்.

மு.திபிஜா

தரம் - 07

யா/உடுப்பிட்டி மகளிர்கல்லூரி

# நரி சொன்ன "யுரேகா"

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. ராஜாவான சிங்கத்திற்கு நரி ஒன்று மந்திரியாக இருந்தது. ஒருநாள் சிங்கம் மந்திரியை அழைத்தது. "ஒன்றுக்கு அருகே ஒரு பூஜ்யம் சேர்த்தால் பத்து; ஒன்றுக்குப் பக்கத்தில் இரண்டு பூஜ்யங்கள் சேர்த்தால் நூறு; ஒன்றுக்கு பக்கத்தில் மூன்று பூஜ்யங்கள் சேர்த்தால் ஆயிரம். ஒன்றுக்கு பக்கத்தில் நூறு பூஜ்யங்கள் சேர்த்தால் வருவதை எப்படிச் சொல்வது மந்திரியாரே?" என்று கேட்டது. நரி யோசித்தது. "உனக்கு நாளை மட்டும் தான் நேரம் தருவேன். அதற்குள் விடையைக் கண்டு பிடிக்காவிட்டால், மந்திரிப்பதவியிலிருந்து நீக்கிவிடுவேன்" என்று சிங்கம் கூறியது.

நரி தனது இருப்பிடத்தை அடைந்தது. யோசிக்கத் தொடங்கியது. நரியின் மகனார் தந்தையிருக்கும் இடத்திற்கு வந்தார். "என்ன அப்பா இவ்வளவு யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டார். ராஜாவின் கேள்வியை மகனிடம் நரி கூறியது. "வாருங்கள் அப்பா கூகுளில் தேடுவோம்" என்று மகனார் கூறினார். மந்திரியார் தேடிப்பார்த்தார். பதில் கிடைத்த போது தந்தையும் மகனும் ஆச்சரியம் அடைந்தனர். விடையே "கூகுள்" தான்! பதில் கிடைத்த மகிழ்ச்சியில் மந்திரியான நரி "யுரேகா யுரேகா" என்று கத்திக்கொண்டு ஓடியது.

பி.சுபாங்கி

தரம் - 08

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

# அனுபவமே வாழ்க்கை

முக்கனிகளும் நிறைந்த வளம் பொருந்திய இடம் ஒன்றினூடாக ஒரு குருவும் மூன்று சீடர்களும் சென்றனர். அப்போது சீடர்கள், "வாழ்க்கை என்றால் என்ன" எனக் கேட்டனர். குருவானவர் "நீங்கள் மூவரும் சென்று மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளையும் நன்கு சாப்பிட்டு வாருங்கள்" என்றார். மூவரும் சென்று நன்றாகச் சாப்பிட்டார்கள். மீண்டும் குருவை வந்து சந்தித்தார்கள். "நீங்கள் சாப்பிட்டதில் எந்தக் கனி சிறந்தது?" என்று குரு கேட்டார். முதலாவது சீடன், "மாம்பழத்தை தோல் நீக்காமல் இலகுவாகச் சாப்பிட முடிந்தது! அதுவே சிறந்த கனி" என்றான். இரண்டாவது சீடனோ "பலாப்பழத்தை உண்ணப் பல்வேறு தடைகளைத் தாண்டினேன். போராட்டத்திற்குப் பின்பே பலாச்சுளை கிடைத்தது. அதுவே சிறந்த கனி" என்று கூறினான். மூன்றாவது சீடனோ "வாழைமரம் ஒரு தடவை மாத்திரமே பழுப்பதால் அதை உண்ணும் போது அந்த மரத்தின் ஆயுளை நினைத்தேன். அந்தக் கனியே சிறந்தது" என்றான். உடனே, குரு மெல்லிய புன்னகை பூத்தார். "வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அனுபவத்தைத் தருகிறது. வாழ்க்கையை அனுபவித்தே அறிய வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால் நீங்கள் வெற்றியடைவீர்கள்" என்று குரு விளக்கம் கொடுத்தார்.


வி.அபிஷா

தரம்-10

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# பாதுகாப்பு

அவுஸ்திரேலியாவிலுள்ள அடர்ந்தகாடு ஒன்றிலே தாய்க்கங்காருவும் ஒரு குட்டியும் வாழ்ந்து வந்தன. அக்குட்டியைத் தாயானது எப்போதும் தனது மடியிலுள்ள பையிலே பாதுகாத்து வந்தது. ஒரு நாள் குட்டிக்கங்காருவுக்கு ஓர் ஆசை தோன்றியது. அது தனது தாயிடம் “வெளியுலகைச் சென்று பார்க்கப் போகிறேன்” எனக் கூறியது. “இந்த உலகம் ஆபத்தானது உலகைத் தனித்து எதிர் கொள்ளும் வயது வரும் வரை பொறுத்திரு” என்று தாய் கூறியது. ஆனால் அந்தக் குட்டிக் கங்காரு மிகவும் அடம்பிடித்தது. ஆகவே, அந்தத் தாய்க்கங்காரு “சரி... சென்று வா... ஆபத்தைக் கண்டால் விரைவாக என்னிடம் வந்துவிடு!” என்று கவலையோடு சொல்லி அனுப்பியது. மிகுந்த



சந்தோசமாகக் கங்காருக்குட்டி தனியே சென்றது. பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தது. ஓரிடத்தில் சிறு பூச்சியைக் கண்டது. அப்பூச்சியை ஒரு தவளை உண்ணுவதற்குத் தாவித்தாவி வந்தது. உடனே பூச்சி பறந்து சென்று தப்பியது. தவளைக்குப் பின்னே பாம்பு ஒன்று மெதுவாக ஊர்ந்து வந்தது. பாம்பு தவளையைப் பிடிப்பதற்குள்ளே தவளை நீரிலே குதித்துத் தப்பியது. வானத்திலே வட்டமிட்ட பருந்து ஒன்று பாம்பினைக் குறிவைத்தது. வேகமாகக் தரையிறங்கத் தயாரானது. எனினும் பாம்பு புற்றினுள் புகுந்து தப்பித்தது. அக்காட்சிகளைக் கண்ட குட்டிக்கங்காரு மிகவும் பயத்தோடு தன் தாயைத் தேடி விரைந்து வந்தது. தாயின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டது. "இந்த உலகைவிட உனது மடிதான் அம்மா பாதுகாப்பு" என்று கூறியது.

சு.திவ்வியன்

தரம்-08

யா/ஹாட்லிக் கல்லூரி

# நட்பின் பரிசு

ஆறு நண்பர்கள் ஓர் அடர்ந்த காட்டுக்குள்ளே சுற்றுலாப் பயணம் சென்றார்கள். காட்டின் உள்ளே ஓரிடத்தில் செடிகொடிகளுக்குள் மான் ஒன்று சிக்கித் தவித்தது. இரு நண்பர்கள் அதைக் கண்டு கொள்ளாமல் சென்று விட்டார்கள். ஆனால், ஏனைய நான்கு பேரும் அந்த மானைச் செடிகொடிகளுக்குள் இருந்து விடுவித்தனர். அப்போது அந்த மான் தேவதையாக மாறியது. "என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி" எனக் கூறியது. அவர்களிடம் இரண்டு சாவிகளைக் கொடுத்தது. "கிழக்குப் பக்கமாகச் சென்றால் பாழடைந்த மாளிகை ஒன்று வரும்.



அங்கே தங்கப் புதையல் உள்ளது. நல்ல மனம் கொண்டவர்களுக்கே அப்புதையல் கிடைக்கும்" என்று கூறி விட்டுத் தேவதை மறைந்தது. நான்கு நண்பர்களும் கிழக்கு நோக்கிச் சென்றனர். பாழடைந்த மாளிகையை அடைந்தனர். பூட்டியிருந்த மாளிகையைத" தேவதை கொடுத்த சாவி ஒன்றைக் கொண்டு திறந்து உள்ளே சென்றனர். புதையலைத் தேடினர். அப்போது ஒருவன் கிடங்கினுள் விழுந்து விட்டான். "இது ஆபத்தான கிடங்கு! இவனைக் காப்பாற்ற முயற்சி செய்தால் நாமும் ஆபத்திலே சிக்குவோம்" எனக் கூறி இருவர் அங்கிருந்து வெளியே ஓடிச் சென்றனர். ஆனால், ஒருவன் மட்டும் நண்பனைக் காப்பாற்ற எண்ணினான். மாளிகை எங்கும் தேடி கயிற்றைக் கண்டுபிடித்தான். கயிற்றின் உதவியோடு கிடங்கினுள் இறங்கினான். கிடங்கினுள் நண்பன் பெட்டி ஒன்றின் மீது அமர்ந்திருந்தான். தேவதை கொடுத்த மற்றைய சாவியின் உதவியோடு பெட்டியைத் திறந்தனர். உள்ளே ஏராளமான தங்கக் கட்டிகள் இருந்தன. தங்கக் கட்டிகளை எடுத்துக் கொண்டு கயிற்றின் உதவியோடு மேலே ஏறி வந்தனர். நல்ல மனதும் நட்பின் துணையும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கக் காரணமானது.

மு.கோகனன்
தரம்-07
யாழ். இந்துக் கல்லூரி

# தீக்குச்சிகளின் உரையாடல்

இந்தியாவின் சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையின் இயந்திரத்திலிருந்து கரிய நிறத் தலையுடனும் வெள்ளை உடலுடனும் ஒரு சிறிய உருவம் பிறந்தது. ஆ! அது ஒரு தீக்குச்சி. அது தன் கண்களைத் திறந்து அங்கிருந்த மனிதர்களையும் இயந்திரங்களையும் ஆச்சரியத்தோடு பார்த்தது. சிறிது நேரத்தில் நகர்ந்து கொண்டே ஒரு பெட்டியினுள் புகுந்தது. அதனுள் நிறைய நண்பர்கள் இருந்தனர். அந்தத் தீக்குச்சி அருகிலிருந்த தீக்குச்சியோடு பேசத் தொடங்கியது. “இந்த மனிதர்கள் நம்மை விட எவ்வளவு உயர்ந்தவர்கள். நமக்கு ஒரு தலையும் உடலும் மட்டுமே இருக்கின்றன. அவர்களுக்கு எத்தனை உறுப்புகள்? அவர்களோடு ஒப்பிடும் போது நாம் எவ்வளவு சிறிய அற்பமான பொருள்கள்?” என்று கூறியது. “இல்லை! இல்லை! நாம் ஒரு வகையிலே அவர்களை விட உயர்ந்தவர்கள் தான்!” என்று அருகிலுள்ள தீக்குச்சி பதில் கூறியது. “எப்படி” என்று புதிய தீக்குச்சி கேட்டது. “இங்கே வேலை செய்யும் டேவிட் தேவாலயத்திற்கு மட்டுமே போவார். சலீம் பள்ளி வாசலுக்கு மட்டுமே போவார். குமரன் கோவிலுக்கு மட்டுமே போவார். ஆனால், நாம் தேவாலயத்தில் மெழுகுவர்த்தியை ஏற்றவும் பள்ளிவாசலில் சாம்பிராணி கொளுத்தவும் கோயிலில் கற்பூரம் ஏற்றவும் தயாராக உள்ளோம். எங்களைப் போல அவர்கள் எப்போது வேறுபாடு பார்க்காமல் ஒன்றுபட்டு வாழ்வார்களோ... அப்போதுதான் எங்களை விட உயர்ந்தவர்கள்” என்று கூறியது.


ஜெ.ஜெயசுவேதா

தரம்-07

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# சேரும் இடம்

ஆடகபுரம் என்ற நகரில் அரசியல்வாதி ஒருவர் இருந்தார். அவரிடம் செல்லப்பிராணியாக நாயொன்று இருந்தது. அந்த நாய் எப்போதும் அவருடனேயே சுற்றித் திரியும். ஒரு நாள் அரசியல்வாதி தனது உதவியாளர்களோடு காட்டிற்கு வேட்டை யாடச் சென்றார். நாயும் எஜமானோடு சென்றது. நாய் காட்டில் அனைத்து இடங்களிலும் சுற்றித்திரிந்தது. ஆற்றங்கரையிலே




யானையொன்றும் குதிரையொன்றும் நீர் அருந்திக் கொண்டிருந்தன. அதைப்பார்த்த நாய் யானையின் அருகே சென்றது. " நீ மிடுக்கான தோற்றமும் அளவிலே பெருமையும் தந்தங்களும் கொண்டவன். உன்னை விடச் சிறியதான குதிரைக்குச் சமமாக நின்று நீர் அருந்துகிறாயே? இனி இப்படிச் செய்யாதே" என்று கூறியது. அதைக் கேட்ட யானையும் குதிரை யும் பேசாமல் நின்றன. நீண்ட நேரத்தின் பின்னர், அந்த நாயானது அதே ஆற்றங்கரையில் மீண்டும் குதிரையைக் கண்டது. அப்போது குதிரையும் கழுதையும் நீர் அருந்தின. நாய் குதிரையிடம் சென்றது. "நீ கம்பீரமும் வேகமும் பெருமையும் மிக்கவன். இந்த அற்பமான கழுதைக்குச் சமமாக நின்று நீர் அருந்துகிறாயே? இனி இப்படிச் செய்யாதே" என்று கூறியது. அதைக் கேட்ட குதிரையும் கழுதையும் பேசாமல் நின்றன. பின்னர், நாயானது புல்வெளியிலே படுத்திருந்தது. யானையும், குதிரையும் கழுதையும் நாயிருக்கும் இடத்திற்குச் சென்றன. "நன்றியுள்ள மிருகமான நீ அரசியல்வாதியோடு சேர்ந்து சூழ்ச்சிகளைப் பழகிவிட்டாய். உன் எஜமானோடு சேர்வதைப் பற்றி நீ முதலில் சிந்தித்துப்பார்" என்றன. நாய் வெட்கத்தோடு தலை குனிந்தது.

நா.டுகிந்தன்
தரம்-09
யா/ஹாட்லிக் கல்லூரி

# வண்ணத்துப்பூச்சியும் வெட்டுக்கிளியும்

ஓர் ஊரில் ஒரு பாடசாலை இருந்தது. அப்பாடசாலைக்குப்பின்னால் ஒரு தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தில் ஒரு செடியிலே வண்ணத்துப்பூச்சியும் வெட்டுக்கிளியும் அமர்ந்திருந்தன. அப்போது அந்த வெட்டுக்கிளி "அனைத்து சிறுவர்களும் உன் பெருமையினையும் அழகினையும் பாடுகிறார்கள். என்னைப் பற்றிப் பாடுவதில்லையே! ஏன்?" என்று வண்ணத்துப்



பூச்சியிடம் கேட்டது. அதற்கு வண்ணத்துப் பூச்சி "நான் ஒரு பூவிலே அமர்ந்தால், அந்தப் பூ காயாகிக் கனியாகும். அக்கனியில் இருந்து விதை வெளியில் வந்து மரமாகும். மனிதர்களுக்கும் நன்மை சேர்க்கும். ஆனால், நீ ஒரு பூவிலே அமர்ந்தால் அந்தப் பூவை அழித்துச் சேதமாக்கி விடுவாய். எனவேதான் அனைத்துச் சிறுவர்களும் என்னை விரும்புகிறார்கள். என் பெருமையைப் பாடுகிறார்கள்" என்று கூறியது.

அ.அஜிதன்

தரம்-05

யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை

# பொன் வண்டு

முன்னொரு காலத்தில் ஓர் ஏழை விவசாயியின் குடிசை அருகில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் பொன் வண்டு ஒன்று குடியிருந்தது. அது அவ்விவசாயிபடும் துன்பத்தை தினமும் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தப் பொன் வண்டு தினமும் பூக்களைக் கொய்து கொண்டு ஆலமர அருகில் உள்ள இறைவனின் சிலைக்கு பூசை செய்து வந்தது. ஒரு நாள் அதன் தூயமனதிற்கு அடிமையான இறைவன் அதனிடம் வந்தார். அவர் அதனை அழைத்து “உனக்கு என்ன வரம் வேண்டும்?” எனக் கேட்டார்.

இறைவனைப் பார்த்து வண்டு “இறைவா, எனக்கு அனைவருக்கும் இல்லை எனக் கூறாது வாரிவழங்கும் வள்ளல் வண்டாக மாறவேண்டும்” என்றது. இறைவனும் “ அப்படியே ஆகட்டும்” எனக் கூறி விட்டு அங்கிருந்து மறைந்தார். மறுநாள் அந்த வண்டு வழமை போல் தன்வேலையைச் செய்தது. ஆனால், மூன்று நாட்களின் பின் அந்த வண்டு கஷ்ரப்படும் விவசாயிக்கு உதவ முன் வந்தது. வண்டு பேசுவதைப் பார்த்த விவசாயி பயந்து போனார். பின் வண்டு அவரைச் சாந்தப்படுத்தி அவரிடம் “ஒரு வரம் கேள்” என்றது.

அவரும் “எனக்குக் கலப்பை வேண்டும்” என முதலில் கேட்டார். அந்த ஆசையைப் பொன் வண்டு நிறைவேற்றியது. பின் அந்தப் பேராசையற்ற விவசாயி இன்னொரு ஆசையாக “புதுக்கலப்பைக்கு இரண்டு புது மாடுகள் வேண்டும்” என்றார். அதையும் நிறைவேற்றியது. சற்றுப் பேராசைப்பட்ட விவசாயி “இந்த ஊரின் தலைவனாக வேண்டும்” என்றார். அதையும்

நிறைவேற்றியது பொன் வண்டு. இதனால் ஆணவம் தலைக்கேறிய விவசாயி "அரண்மனை வேண்டும் அதில் வேலைக்கும் காவலுக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் வேண்டும்" என்றார்.அதையும் நிறைவேற்றியது பொன்வண்டு. அந்த அரண்மனை அருகில் ஒரு குடிசை இருப்பதை விவசாயி கண்டார். அவரின் அரண்மனையை "அந்தக் குடிசை அலங்கோலமாக்குவது போல் இருந்தது. கோபப்பட்ட விவசாயி தானும் குடிசையில் இருந்து தான் இன்று இப்படி ஆனேன் என்பதை மறந்தார். பொன் வண்டிடம் அந்தக் குடிசையை எரித்து விடு" என்றார். அந்த ஆசையும் நிறைவேற்றப்பட்டது.


விவசாயியின் இறுதி வரத்தால் மனமுடைந்த வண்டு இறைவனிடம் சென்றது. வரம் கொடுக்கும் வரத்தைத் திரும்பப் பெறுமாறு கெஞ்சியது. இறைவன் அதற்கு "மனிதர்களே இப்படித்தான் பணம் இல்லாத போது ஒருவர் போன்றும் பணம் உள்ள போது இன்னொருவர் போன்றும் நடப்பார்கள்" எனக் கூறி வரத்தை மீள எடுத்தார். காலத்தினையும் மீள மாற்றினார். வண்டுக்கு வரம் வாங்கிய நாள் மீள வந்தது. "இறைவனிடம் வரம் எதுவும் வேண்டாம்" எனக் கூறிய வண்டு இறைவனை வணங்கிவிட்டு இன்பமாகப் பறந்தது.

ச.சாகித்தியானந்
யா/ ஹாட்லிக் கல்லூரி
தரம்-08

# விளக்குமாற்றின் விளக்கம்

அன்று தைப்பொங்கல் தினம் என்பதால் நான் காலையில் எழுந்து அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன். அப்பாவும் அண்ணாமாரும் பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அப்பா பொங்கல் விழாவுக்காக வீட்டினுள் கட்டிய தென்னங்குருத்தினாலான தோரணம் ஒன்று எங்கள் வீட்டுக்கு வெளியே பார்த்து ஏளனமாக நகைத்துக் கொண்டு இருந்தது. நான் அவ்விடத்தை அவதானித்த போது அங்கு நாம் வீட்டினை துப்பரவு செய்வதற்காக பயன் படுத்தப்படும் தென்னம் ஈர்க்கினாலான விளக்குமாறு ஒன்று





காணப்பட்டது. தோரணம் நகைப்பதை அவதானித்த விளக்கு மாறும் உடனே, தோரணத்தைப் பார்த்து "ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறாய்" எனக் கேட்டது. அதற்குத் தோரணம், "நான் சும்மா சிரிக்கிறேன்" என்றது அதற்கு விளக்குமாறு "இல்லை இல்லை உமது சிரிப்பில் ஓர் ஏளனம் இருக்கிறது, அதற்கான காரணத் தைக் கூறும்" என்றது. அதற்குத் தோரணம் மீண்டும் சிரித்து விட்டு "எம் இருவரது பிறப்பும் ஒரே இடம்தான் ஆனால்..." என்று கூறி மீண்டும் வாய் விட்டுச் சிரித்தது. "ஆம். எனக்கும் தெரியும் ஆனால், நீர் வாய் விட்டுச் சிரிக்கும் அளவிற்கு இப்போது என்ன நடந்து விட்டது" என விளக்குமாறு கேட்டது. "நம் பிறப்பிடம் ஒரே இடமாக இருந்தாலும் நான் எல்லோரது வீட்டின் உள்ளேயே இருக்கிறேன். நீயோ வீட்டுக்கு வெளியே ஓர் ஒதுக்குப் புறத்தில் இருக்கிறாய். அத்துடன் நான் எல்லோரது இன்ப, துன்ப நிகழ்வு களில் மிகவும் அழகாக அலங்கரிக்கப்படுகிறேன். ஆனால், நீயோ அவர்களது வீடுகள் மற்றும் சுற்றுப் புறங்களில் உள்ள அசுத்தங்களையும் குப்பைகளையும் அகற்றுவதற்கு பயன்படுத் தப்படுகின்றாய். அதை எண்ணித்தான் நான் இவ்வாறு நகைக்கிறேன்" என்றது தோரணம். தோரணம் கூறியதைக் கேட்ட விளக்குமாறு மௌனமானது. அப்போது, அம்மா என்னை அழைக்கும் சத்தம் கேட்டு நான் சென்று விட்டேன். பொங்கலின் மறுநாள் நான் வெளியே வந்து விளக்குமாற்றைத் தேடினேன். அப்போது எனது அம்மா தனது கையில் விளக்குமாற்றை வைத்திருந்ததைக் கண்டேன். பொங்கல் அன்று தோரணத்தின் கதையைக் கேட்டு மௌனமாக இருந்த விளக்குமாறு கதைக்கத் தொடங்கியது. "நண்பா! நேற்றைய தினம் நீ வீட்டினுள் அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தாய் ஆனால், இன்று நீ ஒரு குப்பையாக கீழே கிடக்கின்றாய். குப்பையாக இருக்கும் உன்னை துப்பரவு செய்வதும் நான்தான். உன்போல் நான் ஆணவத்தில் ஆடியதில்லை" என்று கூறியது. விளக்குமாறு தனது பணியைத் தொடங்கியது.

ச.சௌமியா

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

தரம் 9

# உண்மையே வெல்லும்

சிங்கம் ஒன்று காட்டை ஆண்டு வந்தது. சிங்கத்தின் இராஜ்யத்தின் போது, ஒருநாள் குரங்கும், கரடியும் நீதிகேட்டு வந்தன. கரடியின் சேமிப்பிலிருந்த தேன்வதைகளைக் குரங்கு திருடியதாக கரடி குற்றம் சுமத்தியது. குரங்கோ "நான் திருடவே இல்லை! இது வீண்பழி! நான் அப்பாவி" என்று வாதாடியது. குரங்கும் சிங்கமும் நட்போடு இருந்ததால், குரங்கின் மீது சிங்கம் நல்ல மதிப்பு வைத்திருந்தது. எனவே வழக்கினைத் தீர ஆராயாமல் குரங்கிற்குச் சார்பாகத் தீர்ப்பளித்தது. வழக்கின் தீர்ப்பால் சோகமடைந்த கரடி, தனது வீட்டை அடைந்தது. வருத்தத்துடன் தனது நண்பனான மானிடம் நடந்தவற்றைக் கூறியது. கரடிக்கு ஆறுதல் கூறிய மான் வேகமாக விடைபெற்றுச் சென்றது.

மான் தனது நண்பர்களான தேனீக்களை அழைத்தது. நடந்த விடயத்தைக் கூறியது. குரங்கின் வீட்டுக்குச் செல்லுமாறு தேனீக்களுக்கு யோசனை சொன்னது. தேனீக்கள் குரங்கின் வீட்டை நோக்கிப் பறந்து சென்றன. தேன் வதைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தினைக் கண்டறிந்தன. குரங்கின் வீடு தேனீக்களால் சூழப்பட்டது. குரங்கின் வீட்டிலே நிகழ்ந்த குழப்பத்தால் காட்டு விலங்குகள் குரங்கின் வீட்டுக்கு முன் கூடின. விடயமறிந்து சிங்கமும் வந்தது. உண்மையான குற்றவாளியை இனங்கண்டது. குரங்கிற்கு தண்டனை வழங்கியது.

த.:.நிருபனா

தரம் - 10

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# அரை உயிர்கள்

ஒரு நாட்டிலே ஆங்கிலம் என்ற பெயருடைய தாயார் ஒருவர் இருந்தார். அவருக்கு இருபத்தாறு பிள்ளைகள் பிறந்தனர். "தினமும் கடவுளை வணங்கி, நற்பண்போடு வாழுங்கள். கடவுள் அருள் தருவார்" என்று தாயார் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறினார். ஐந்து பிள்ளைகள் மட்டும் தாயாரின் சொல்லைத் தட்டாது தினமும் கடவுளை வணங்கினர். ஒரு நாள் கடவுள் ஐந்து பிள்ளைகளுக்கு முன்னால் தோன்றினார். "நீங்கள் ஐவரும் முதன்மையைப் பெறுவீர் கள். உங்களை உலகம் உயிராகக் கருதும். உங்களோடு இணைந் தாலே பிறருக்கும் அர்த்தம் கிடைக்கும்" என்று வரம் கொடுத்தார்.

கடவுள் வரங்கொடுத்ததை அறிந்த ஏனைய இருபத்தொரு பிள்ளைகளும் கவலை கொண்டனர். வரம் பெற்ற ஐவரும் கர்வம் அடைந்தனர். A,E,I,O,U என்ற அவர்கள் ஐவரும் ஏனைய சகோதரர் களை மதிக்கவில்லை. இதை அவதானித்த W, Y என்ற இரு சகோதரர்களும் கடவுளை வழிபடத் தொடங்கினர். தமது தவறுக்காக வருந்தினர். ஒரு நாள் கடவுள் அவர்களின் முன்பு தோன்றினார். "அன்பானவர்களே! உங்கள் பக்தியை மெச்சினேன். உங்களை இனிமேல் உலகம் அரை உயிராகக் கருதும். A, E, I, O, U என்ற ஐவரின் துணையின்றி உங்களால் அர்த்தம் கிடைக்கும் வாழ்வினை வாழ முடியும்" என்று வரங்கொடுத்தார். Sky, Crwth என Yயும் Wஉம் உயிரின்றியே ஏனையோருடன் இணைந்து அர்த்தம் கொடுத்தன. A,E,I,O,U என்பன தமது தவறை உணர்ந்து சகோதரரை ஏற்று மகிழ்ந்தன. சமத்துவத்தோடு வாழ்ந்தன.

க.கவிந்தியா
தரம் - 10
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# இரண்டு மைனாக்கள்

ஓர் ஊரில் அமலன் எனும் மாணவன் ஒருவன் இருந்தான். இரண்டு மைனாக்களை பார்த்தால் அன்றைய நாள் நல்ல நாளாக அமையும் என அவனிடம் நம்பிக்கை இருந்தது. தினமும் பாடசாலைக்குப் போகும் போது இரட்டை மைனாக்களைப்பார்க்க ஆசைப்படுவான். ஒருநாள் பரீட்சைக்குப் போகும் போது தோட்டமொன்றில் இரு மைனாக்கள் அமர்ந்திருந்தன. அன்று அவன் சந்தோஷமாகப் பரீட்சை எழுதினான். அதன் பிறகு ஒவ்வொரு நாளும் பரீட்சைக்குச் செல்லும் போது தோட்டத்திற்குப்போய் அந்த மைனாக்களைப் பார்த்து விட்டே செல்வான்.

நாள்கள் கடந்தன. பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது. அவன் சித்தியடைந்திருந்தான். மகிழ்ச்சியோடு பாடசாலையிலிருந்து வீடு திரும்பினான். தோட்டத்தினைப் பார்த்தான். இரண்டு மைனாக் களையும் காணவில்லை. வீட்டுக்குச் சென்றான். அவனது தாத்தா இரண்டு மைனாக்களை கூண்டிலே அடைத்து வைத்திருந்தார். "ஏன் தாத்தா மைனாக்களை கூண்டிலே அடைத்து வைத்திருக்கிறீர்கள்" என்று அமலன் கேட்டான். அதற்குத் தாத்தா "அவற்றுக்கு பேசப்பழக்கப் போகிறேன்" எனச் சொன்னார். "அவற்றுக்கு எமது மொழி தேவையில்லை. அவற்றின் மொழியே போதும். எனக்கு நம்பிக்கை தந்தவை இந்த மைனாக்கள். அவற்றைத் திறந்து விடுங்கள் தாத்தா" என்று கெஞ்சினான். தாத்தாவும் அவற்றைத் திறந்து விட்டார். இரண்டு மைனாக்களும் மகிழ்ச்சியோடு பறந்தன.

அ.கவிஷ்

யா/நெல்லியடி மத்திய கல்லூரி

தரம் - 09



ISBN 955524963-6
9789555249638